Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.83/2017

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பிரமானந்தராஜ் | Occupation | ஐடி நிறுவன ஊழியர் |
| Father's name | வேல்முருகன் | Calling | |
| Village | ராஜபாளையம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of June 2026.

18.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஐடி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை-

திருவில்லிபுத்தூர் சன்னதி தெருவில் ஸ்ரீவராக கருட சக்கரா என்ற பெயரில் இவ்வழக்கின் எதிரி ரியல் எஸ்டேட் நடத்தி வந்ததாகவும் பொதுமக்களிடம் மாதத்தவணையாக பணம் வசூலித்து பிளாட் தருவதாக கூறி பணம் வசூல் செய்ததாகவும் நானும் மற்றவர்களும் மேற்படி திட்டத்தில் சேர்ந்து ஒரு பிளாட்டுக்கு மாதம் ரூ.290/- வீதம் 46 மாதங்கள் கட்டிவந்தேன் என்றும் அதனால் மேற்படி பிளாட்டிற்கு பத்திரபதிவு செய்வதற்காக ரூ.5500/- செலுத்தியதாகவும் ஆனால் பத்திரப்பதிவு செய்து தரவில்லை என்றும் அதுபற்றி நானும் மற்ற நபர்களும் பலமுறை

இவ்வழக்கின் எதிரியிடம் கேட்டபோது அவர் என்னையும் என்னுடன் வந்தவர்களையும் தரக்குறைவாக பேசி கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அதனால் மேற்படி சங்கதிகள் சம்மந்தமாக அசா.1 திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் புகார் மனுகொடுத்ததாகவும் அதில் நடவடிக்கை எடுக்காததால் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து அதன் அடிப்படையில் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.